DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

CC.289/2016

Deposition of witness for PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திருமதி.ராதா | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 21.11.2022

முதல் விசாரணை – நான் தற்போது விருதுநகர் மாவட்ட Q பிரிவு குற்றபுலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.6.2015 ம்தேதி விருதுநகர் மாவட்ட க்யு பிரிவு குற்றபுலனாய்வு துறையில் சார்பாய்வாளராக பணியில இருந்து போது ஆய்வாளர் சாந்தாலட்சுமி, சார்பாய்வாளர் பாலகணேஷ் ஆகியோருடன் நானும் மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் சேர்ந்து க்யு பிரிவு அலுவல் சம்மந்தமாக கண்காணித்து வந்தபோது ராஜபாளையம் மொட்டமலை அகதிகள் முகாமிற்கு மேல் பக்கமுள்ள சுந்தரபாண்டியன் என்பவருக்கு சொந்தமான பிரித்வி கிரானைட் குவாரியில் சட்ட விரோதமாக வெடி பொருட்கள் வைத்திருப்பதாகவும் அந்த பொருட்களை பாதுகாப்பின்றியும் வெடிக்க கூடிய நிலையில் இருந்ததாலும் முறையான அனுமதி பெறாமல் வெடிபொருட்கள் வைத்திருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பிள்ளையார் குளம் கிராம நிர்வாக அலுவலர் அழகர்ராஜ், கிராம உதவியாளர் சமுத்திரகனி ஆகியோருடன் மதியம் 2.30 மணிக்கு குவாரிக்கு சென்று மேலாளராக பணிபுரிந்த சாமியண்ணன் என்பவரிடம் விசாரித்தபோது குவாரியிலுள்ள பூமிக்கடியில் பதுக்கி வைத்திருந்த அலுமினியம் சூப்பர் பிளைன் டெட்டனேட்டர் 110 எண்ணம், டெட்டர்னேடிக் கார்டு, சுமார் 600 மீ ஜெலட்டின் குச்சி 131, கரிருந்து திரி 60 மீ ஆகிய பொருட்களை எடுத்து ஆஜர் செய்ய ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில கைப்பற்றி அத்தாட்சி ஒன்று தயார் செய்தார். அந்த

அத்தாட்சியில் கிராம நிர்வாக அலுவலரும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தார்கள். வெடிபொருட்களை பற்றி சாமியண்ணனிடம் கேட்டபோது சங்கரன்கோவில் தாலுகா பாலன் வெடி பொருள் உரிமையாளர் ராமசாமி என்பவர் கொண்டு வந்து குவாரியில் வைத்து விட்டு சென்றதாக கூறினார். மேற்படி பொருட்கள் வெடிக்கக் கூடிய நிலையில் இருந்ததாலும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருட்கள் என்பதாலும் முறையாக அனுமதி பெறாததாலும் பாதுகாப்பு இல்லாமலும் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி சாமியண்ணன் மீதும் பொருட்களை வைக்கச்சொல்லி கொடுத்து சென்ற பாலன் வெடி பொருள் உரிமையாளர் ராமசாமி என்பவர் மீதும் நடவடிக்கை எடுப்பதற்காக எதிரி சாமியண்ணனை கைது செய்தும் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய பொறுப்பிலிருந்த சார்பாய்வாளர் கந்தசாமி என்பவரிடம் தனி அறிக்கை கொடுத்தும் எதிரியையும் வழக்கு சொத்தையும் சார்பாய்வாளரிடம் ஒப்படைக்க காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை – சம்பவயிடத்தில் அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் சம்பவயிடத்தில் வைத்து ஆய்வாளர் தயார் செய்தார். எத்தனை மணிக்கு அத்தாட்சி தயார் செய்யப்பட்டது என்று என்னால் குறிப்பாக கூறமுடியுமா என்றால் குறிப்பான நேரம் தெரியாது. நான் காவல் விசாரணையில் கூறியுள்ளவாறு சம்பவ நாளில் 14.30 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். நான் அத்தாட்சியில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் தனிப்பட்ட சாட்சிகள் அல்லது குவாரியில் வேலை செய்த நபர்கள் இருந்தார்களா என்றால் அங்கு பணிபுரிந்த நபர்கள் இருந்தார்கள். சம்பவயிடத்திற்கு காவல் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோர் வந்தார்களா என்றால் வந்தார்கள். காவல் விசாரணையில் நான் கூறியுள்ள விவரங்கள் காவல் ஆய்வாளர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ஆய்வாளர் தயார் செய்த தனி அறிக்கையில்

உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது போலிஸ் விசாரணையில் பாலன் எக்ஸ்புலோசிவ் உரிமையாளர் ராமசாமி என்று கூறியுள்ளது தவறு என்றால் தவறல்ல. என்னை சம்பவத்திற்காக சுந்தரபாண்டியன் ஆய்வாளர் விசாரித்தார். எப்போது சம்பவத்தை பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் சம்பவ நாளன்று விசாரித்தார். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது சம்பவயிடத்தில் நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்ப வயிடத்தில் நான் இருந்திருந்தால் எவ்வளவு நேரம் சம்பவயிடத்தில் இருந்தேன் என்ற விவரம் தெரிந்திருக்கும் ஆனால் நான் சம்பவயிடத்தில் இல்லை என்பதால் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் போலிஸ் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் வழக்கிற்காக ஆய்வாளரின் பரிந்துரையின்பேரில் கூறியுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் காவல் விசாரணையில் சொன்னவாறு எதிரியை சொன்ன நேரத்தில் காவல் ஆய்வாளரிடம் எதிரிகளை ஒப்படைக்கவில்லை என்றாலும் தனி அறிக்கை, அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பொருட்கள் வழக்கிற்காக பொய்யாக கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.